**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.77/2017**

**நாள் - 18.03.2024.**

**பெயர். திருமதி. பாக்கியலட்சுமி க/பெ.சுகுமார்.**

**வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1,2,6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் துர்க்கம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரி தான். என் தாயார் வீடு ஒண்ணுபுரம் கிராமம் என்றால் சரி தான். வழக்கு சொத்து துர்க்கம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரி தான். துர்க்கம் கிராமத்தில் இருந்து ஒண்ணுபுரம் கிராமம் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும்.

2. 4ஆம் பிரதிவாதி என் கணவர் என்றால் சரி தான். நானும் என் கணவரும் திருமணம் நடந்த நாளில் இருந்து இன்றைய தேதி வரை ஒரே குடும்பமாக தான் வசித்து வருகிறோம் என்றால் சரி தான். எந்த வருடம் எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் 1979ஆம் ஆண்டு ஆகும்.

3. என்.வி. சோமசுந்தர செட்டியார் மற்றும் சாளம்மாள் ஆகியோர் என் மாமனார், மாமியார் என்றால் சரி தான். தற்போது என் மாமனார், மாமியார் இருவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரி தான். என் மாமனார் என்.வி. சோமசுந்தர செட்டியாருக்கு 3ஆம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன், 4ஆம் பிரதிவாதி சுகுமாறன் மற்றும் தேவக்குமார் ஆகியோர்கள் மகன்கள் என்றால் சரி தான். சசிரேகா, பேபி ஆகியோர் என்.வி. சோமசுந்தர செட்டியாரின் பெண் வாரிசுகள் என்றால் சரி தான்.

4. 3ம் பிரதிவாதியின் முதல் மனைவியின் பெயர் ராஜேஸ்வரி என்றால் சரி தான். நான் ராஜேஸ்வரியை பார்த்துள்ளேனா என்றால் ராஜேஸ்வரி உயிருடன்

இருக்கும்போது தான் எனக்கு திருமணமானது. 3ம் பிரதிவாதி மற்றும் ராஜேஸ்வரிக்கு பிறந்தவர்கள் தான் 1ம் பிரதிவாதி பாஸ்கரன் மற்றும் யுவராஜ் ஆகியோர்கள் என்றால் சரி தான்.

5. இதை தவிர்த்து 3ம் பிரதிவாதிக்கும் ராஜேஸ்வரிக்கும் ஹேமமாலினி என்ற மகளும் இருந்தார் என்றால் சரி தான். தற்போது அவர் இறந்துவிட்டார். 3ம் பிரதிவாதியின் இரண்டாவது மகனான யுவராஜும் இறந்துவிட்டார் என்றால் சரி தான். மேற்படி யுவராஜின் மனைவி தான் 2ம் பிரதிவாதி ஜெயசித்ரா மற்றும் மகள்கள் 6,7 பிரதிவாதிகள் என்றால் சரி தான்.

6. மேற்படி ராஜேஸ்வரி குடும்ப சூழ்நிலை காரணமாக கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துக்கொண்டார் என்றால் சரியல்ல. சிறிது நாட்கள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார், அதனால் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார். ராஜேஸ்வரி உடல்நிலை நன்றாக தான் இருந்தார் என்றாலும், நான் வழக்கிற்காக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. மேற்படி ராஜேஸ்வரியும், ஹேமமாலினியும் ஒன்றாக தான் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துக்கொண்டார்கள் என்றால் சரி தான். மேற்படி ராஜேஸ்வரியும், ஹேமமாலினியும் அவரது கணவரான 3ம் பிரதிவாதியின் கொடுமை தாங்காமல் குழந்தையுடன் தற்கொலை செய்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

8. 5ஆம் பிரதிவாதி 3ஆம் பிரதிவாதியின் இரண்டாவது மனைவி என்றால் சரி தான். ராஜேஸ்வரி இறந்த பிறகு இரண்டாவதாக 3ம் பிரதிவாதி 5ஆம் பிரதிவாதியை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரி தான். 3 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு மக்கள் எதுவும் பிறக்கவில்லை என்றால் சரி தான்.

9. 4ஆம் வாதி என் உடன் பிறந்த அண்ணன் என்றால் சரி தான். 3ம் வாதி என் அண்ணி தனலட்சுமியின் தங்கை என்றால் சரி தான். 2ம் வாதி என் கணவர் உறவு முறையில் பங்காளி முறை என்றால் சரியல்ல. அதே தெருவில் வசிக்கிறார். 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் என் வீடு இருக்கிறது என்றால் சரி தான். நான் இல்லத்தரசி என்றாலும், தனிப்பட்ட முறையில் எனக்கு வருமானம் எதுவும் இல்லை என்றாலும் சரி தான்.

10. வா.சா.ஆ.3 கிரயப்பத்திரமானது 3ம் பிரதிவாதியான என் கணவர் எனக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரி தான். வா.சா.ஆ.3 கிரயப்பத்திரம் சம்பந்தமாக எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் இடையே பண பரிவர்த்தனை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ரூ.25,000/- பணம் கொடுத்தேன். என் கணவரான 3ம் பிரதிவாதி ஆவணத்தை உருவாக்கவேண்டும் என்பதற்காக மேற்படி வா.சா.ஆ.3 கிரயப்பத்திரத்தை என் பெயரில் ஏற்படுத்தியுள்ளார் என்றாலும், நான் கூறுவது போல் பணபரிவர்த்தனை எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

11. மேற்படி ரூ.25,000/-பணம் எனக்கு எவ்வாறு வந்தது என காண்பிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ரூ.25,000/-பணம் எவ்வாறு வந்தது என எனது வாதுரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

12. வா.சா.ஆ.3 கிரயப்பத்திரத்தில் ரூ.7000/- தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும், நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.25,000/- பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும், பணபரிவர்த்தனை நடந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கிரயப்பத்திரத்தில் உள்ள சர்வே எண், விஸ்தீரணம் மற்றும் ஜக்பந்தி ஆகியவை எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது.

13. வா.சா.ஆ.3 கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவித்தது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்தை நான் அனுபவிக்கிறேன் என காண்பிக்க பட்டா ஏதேனும் வாங்கியுள்ளேனா என்றால் பட்டா எதுவும் வாங்கவில்லை. அதற்குள் தகராறு நடந்ததால் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.

(1,2,6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

ஒப்/- பி.டி. சதீஷ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆரணி.